தமிழீழ விடுதலைப் புலிகள்
டென்மார்க் கிளை.

13.05.2024

அன்பார்ந்த தமிழீழ மக்களே.

எமது வீர விடுதலை வரலாற்றில் ஒரு முக்கிய திருப்புமுனையில் நாம் இன்று நிற்கின்றோம் மிகவும் நீண்ட கடினமான நெருக்கடிகள் நிறைந்த ஒரு வரலாற்று பயணத்தை தொடர்ந்து கொண்டிருக்கின்றோம் உலகின் எந்த ஒரு விடுதலை இயக்கமுமே சந்தித்திராத சவால்களை எதிர்பாராத திருப்பங்களை எதிர்கொண்டிருக்கின்றோம். எத்தனை சவால்களுக்கு முகம் கொடுத்தாலும் எத்தனை இடையூறுகளை எதிர்கொண்டாலும் எத்தனை சக்திகள் எதிர்த்து நின்றாலும் நாம் தமிழரின் சுதந்திர விடிவிற்க்காக தொடர்ந்து போராடுவோம். வரலாறு விட்ட வழியில் காலமிட்ட கட்டளைப் படி சிங்கள அந்நிய ஆக்கிரமிப்பு அகலும் வரை நாம் தொடர்ந்து போராடுவோம்."

தமிழீழத் தேசியத் தலைவர் மேதகு வேலுப்பிள்ளை பிரபாகரன்.

தேசியத் தலைவர் மற்றவர்களைப் போல உருவாக்கப்பட்டவர் அல்ல. தமிழீழக் கோட்பாட்டின் சிந்தனைச் சிற்பியும் அவர்தான். இந்த ஒப்புவமையற்ற தலைமையை அழித்து தாங்கள் நினைத்தபடி தமிழினத்தை வழிநடத்த அல்லது சுதந்திர வேட்கையை நீர்த்துப்போகச் செய்ய ஒரு உருவாக்கப்பட்ட தலைமை அவசியமாகின்றது. இதனை உருவாக்கவே இந்த ஓரங்க நாடகம். காரியம் முடிந்ததும் விளக்குக் கொளுத்தும் களத்தில் நிற்பவர்களும் காணாமல் போய்விடுவார்கள்.

ஆயுதப்போராட்டம் மௌனிக்கப்பட்ட இந்த 15 ஆண்டுகளில் மிகப்பெரும் புலனாய்வுப் போரை தமிழீழத்தின் மீதும் புலம்பெயர்ந்த தேசங்களிலும் தொடுத்துள்ளனர். இங்கு தேசியத்தலைவரின் சிந்தனையும் அவரால் புலம்பெயர்ந்த நாடுகளில் கட்டமைக்கப்பட்ட கட்டமைப்புகளும் இத்தடைகள் யாவையும் உடைத்து தொடர்ந்தும் தமிழீழ மண்ணின் விடுதலைக்காகவும் நீதிக்கான போராட்டத்தையும் முன்னெடுத்து வருகின்றனர்.

எமது எதிரிகளுக்கும் துரோகிகளுக்கும் வலுச்சேர்ப்பது போல் எமது தேசிய தலைவரின் உடன் பிறந்த அண்ணனான மதிப்புக்குரிய மனோகரன் அவர்களின் குடும்பத்தினரை பயன்படுத்தி எமது தமிழீழ விடுதலைச் சக்கரத்தை நிறுத்திவிட எதிரி எடுத்த கடைசி ஆயுதமே எமது தேசிய தலைவருக்கான வீரவணக்க நிகழ்வாகும்.

மதிப்புக்குரிய மனோகரன் அவர்களின் குடும்பத்தினரை பயன்படுத்தி அவர்கள் மேல் அவப்பெயர் ஏற்படுத்தும் வகையான செயல்களைச் செய்ய எதிரி திட்டமிட்டுள்ளான். இந்த சதி நடவடிக்கையை உணர்ந்து மதிப்புக்குரிய மனோகரன் அவர்களின் குடும்பத்தினர் ஏற்பாடு செய்துள்ள இந்த வணக்க இந்நிகழ்வை நிறுத்தி, மே 18 தமிழின அழிப்புக்கு நீதி கோரும் நாளாக உறுதி எடுப்போம்.

தமிழீழ விடுதலைப் புலிகள் டென்மார்க் - கிளை
Liberation Tigers of Tamil Eelam - Danmark

**அன்பார்ந்த டென்மார்க் வாழ் தமிழீழ மக்களே!**

காலம் காலமாக எமது விடுதலைப் போராட்டத்திற்கு நீங்கள் அளித்து வரும் பங்களிப்பு மிக பெரியது, பல நெருக்கடிகள் வந்தபோதும் எமக்கு பக்க பலமாக உறுதியோடு நீங்கள் அனைவரும் அணியாக திரண்டு விடுதலை மூச்சை விரைவாக்கி வந்துள்ளீர்கள், அதேபோல் இப்போதும் வந்துள்ள எதிரியின் இந்த சதிவலையை நாம் அனைவரும் ஒன்று திரண்டு முறியடிப்போம் என உறுதி எடுத்துக்கொள்வோம்!

"உலகின் எந்த ஒரு விடுதலை இயக்கமுமே சந்தித்திராத பல சரிவுகளை பல திருப்பங்களை பல நெருக்கடிகளை நாம் இந்த வரலாற்று ஓட்டத்திலே எதிர்கொண்டிருக்கின்றோம் எமது பலத்திற்கு மிஞ்சிய பாரிய சக்திகளை எல்லாம் நாம் எதிர்கொண்டிருக்கின்றோம். வல்லமைக்கு மிஞ்சிய வல்லாதிக்க சக்திகளோடு நேரடியாக மோதியிருக்கிறோம். அலை அலையாக எழுந்த எதிரியின் ஆக்கிரமிப்புகளை எல்லாம் நேருக்கு நேர் நின்று சந்தித்திருக்கின்றோம். பெருத்த நம்பிக்கை துரோகங்கள் பெரும் நாசச் செயல்கள் என எமக்கு எதிராக பின்னப்பட்ட எண்ணற்ற சதிவலைப் பின்னல்களை எல்லாம் தனித்து நின்று தகர்த்திருகின்றோம். புயலாக எழுந்த இத்தனை பேராபத்துகளையும் மலையாக நின்று எதிர்கொண்டோம்.

சத்திய இலட்சியத் தீயில் தம்மையே அழித்துச் சரித்திரமாகிவிட்ட எமது மாவீரர்கள் வழியில் சென்று நாம் எமது இலட்சியத்தை அடைவோமென உறுதியெடுத்துக்கொள்வோமாக.

“ தமிழரின் தாகம் தமிழீழத் தாயகம் ”

தமிழீழ விடுதலைப் புலிகள்
டென்மார்க் - கிளை.